இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com
தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி X, பதிப்பு 24, ஜூலை – டிசம்பர்; 2026
Formally UGC Approved Journal (64089), © Author

# பரிபாடலும் திருமாலின் அவதாரங்களும்

**அ. ஆர்த்தி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி, சி. முட்லூர், சிதம்பரம்

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடல், இறைவழிபாடு மற்றும் வழிபாட்டு அமைப்புகளை முதன்மைப்படுத்திப் பாடும் தனித்தன்மை வாய்ந்தது. குறிப்பாக, திருமாலின் தெய்வத் தன்மையையும் அவரின் பல்வேறு அவதாரங்களையும் போற்றிப் பாடும் பாடல்கள் இதில் நிறைந்துள்ளன. இக்கட்டுரை, பரிபாடலில் இடம்பெற்றுள்ள திருமாலின் அவதாரங்கள் பற்றிய செய்திகளையும், அவற்றுள் காணப்படும் தொன்மங்கள், உருவ வழிபாட்டு அம்சங்கள் மற்றும் சமயக் கோட்பாடுகளை விரிவாக ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள்:** பரிபாடல், திருமால், அவதாரங்கள், சங்க இலக்கியம், தெய்வ வழிபாடு, விஷ்ணு, பாற்கடல்.

## முன்னுரை

சங்க காலந்தொட்டு இன்றைய காலம் வரை தமிழர்களால் ய தெய்வ வழிபாடுகளில் திருமாலாகியபின்பற்றக் கூடி நாராயணனின் வழிபாடு முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது சங்க . இலக்கியங்களில் திருமாலை பற்றிய குறிப்புகள் பத்துப்பாட்டு எட்டுத்தொகை பாடல்களில் காணக்கிடக்கின்றன. எட்டுத்தொகையில் ஒன்றான பரிபாடலில் திருமாலின் அவதாரங்கள் பேசப்பட்டுள்ளதால் பரிபாடலை முதல் அதிகமாக நூலாகவும் முக்கிய இறைவன் மேல் நிலையிலிருந்து . நூலாகவும் எடுத்துக் கொண்டேன்

அவதாரம் ,தானே கீழ் இறங்கி மண்ணுலகில் தோன்றி வரும் நிலை எனப்படுகிறது அறத்தை நிலைநாட்டவும் ,நல்லோரைக்காக்கவும். காலந்தோறும் றிய வருவதனையும்வெவ்வேறு வடிவங்களில் தோன் அவதாரங்களின் வகைபாடுகளையும் வைணவ நூல்கள், மச்சம் முதலான பத்து அவதாரங்களை.எடுத்துரைக்கின்றன சிறப்பாக இறைவன் எடுக்கின்ற அவதாரங்கள்,கூறினும் எண்ணற்றவையாய் இறைவன் இவ்வாறு அடியார்கள்.இருக்கும் பொருட்டு அவதாரம் ம்எடுத்து வருவது எப்போது எல்லாம் தர்ம அழிந்து அதர்மம் தலை தூக்குகிறதோ அப்போது எல்லாம் தர்மத்தை அழித்து தர்மத்தை மீண்டும் நிலை நாட்ட யுகம் தோறும் அவதாரம் எடுத்து வருகிறார். இது குறித்து பரிபாடலில் திருமாலின் அவதாரங்கள் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது

**பரிபாடல்**

மோகினி ,கூர்மம் ,திரட்டில் பரிபாடல் மற்றும் பரிபாடல் ,வராகம் திரிவிக்ரமம் முதலிய அவதாரங்கள் குறித்தச் – வாமன ,நரசிம்மம் அவை .செய்திகள் இடம் பெற்றுள்ளன

**முதன்முறை யிடைமுறை கடைமுறை தொழிலிற்"**
**(72–3:71.பரி)." பிறவாய் பிறப்பிலை பிறப்பித்தோர் ரிலையே**

ப்பது இங்குகடுவனிளவெயினனார் பாடியிரு ,என்று அழித்தல் முத்தொழிற் ,காத்தல் ,படைத்தல் .சிந்திக்கத்தக்கது பற்றி பிறவாப் பிறப்பில்லை அவனைப் பிறப்பித்தார் யாருமில்லை என்று கூறியிருப்பதும் திருமால் எடுக்கும் அவதாரங்களும் மிக்க .பொருத்தமுடையதே என்பது தெளிவு

**கூர்ம மோகினி அவதாரங்கள்**

கூர்ம. கந்தோறும் அவதரித்து வருகின்றார்திருமால் யு அவதாரம் வைணவ சமய நம்பிக்கையின்படி விஷ்ணு எடுத்த இதில் இவர் ஆமை அவதாரம் . இரண்டாவது அவதாரம் ஆகும் அதன் தொடர்ச்சியாக மோகினி அவதாரம் எடுத்து .எடுத்தார் அரக்கர்களை மயக்கியதாகவும் பரிபாடல் கூறுகின்றது இதனை,

**முந்நீர் கடைந்தாக்கால் வெற்புத் திகழொளி"**
**திகழ்பெற வாங்கித்தஞ் சீர்ச்சிரத் தேற்றி**
**(66–1:64,திரட்டு.பரி)."மகர மறிகடல் வைத்து நிறுத்துன்**

திருப்பாற்கடலில் ,மத்தாக பாம்பினை வடமாக கொண்டு தேவ அசுரர்கள் அமிர்தம் வேண்டி கடைந்த பொழுது அவர்களுக்கு ஆமையாக உரு கொண்டு மகாவிஷ்ணு உதவி செய்தார் .அதே

மகாவிஷ்ணு தான் அமிர்தம் கிடைத்தவுடன் அதை பகிர்ந்து கொடுப்பதற்காக மோகினி யாக அவதரித்தார் .இதனை ,

**நகை யச் சாக நல்லமிர்து கலந்த"**

**(34–3:33.பரி)."நடுவநிலை திறம்பிய நயமி லொருகை**

இந்து புராணங்களின் படி கூர்ம அவதாரமானது,தொடர்ச்சியாக மோகினி அவதாரம் எடுத்து அரக்கர்களை மயக்கியதாகவும் கதை உண்டு .அமிர்தத்தை தேவர்கள் மட்டுமே உட்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் ,அசுரர்களுக்கு இறப்பில்லாத் தன்மை கிடைத்தால் அது ஆபத்தாகி விடும் என்பதாலும் அதை அசுரர்களுக்கு கொடுக்காமல் இருப்பதற்காக விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து அசுரர்களை ஏமாற்றியதாகவும் பரிபாடல் சிறப்பாக உணர்த்துகின்றது .

**வராக அவதாரம்**

பூமியை மீட்டெடுத்த திருமாலின் வராக அவதாரம் பரிபாடலில் களிறு என்று ,ஐந்து இடங்களில் கேழல் .பெயர் சுட்டாமல் நிகழ்வாகவும் கூறப்பட்டுள்ளன ,பெயர்ச்சுட்டியும் ,இதனை

**கேழ றி கழ்வரக் கோலமொடு பெயரிய"**

**(17–2:16.பரி)."....ஊழி லொருவினை உணர்த்தலின்**

என்றும்,

**செய்யோள் சேர்ந்ததின் மாசி லகலம்"**

**வளர்திரை மண்ணிய கிளர்பொறி நாப்பண்**

**வைவான் மருப்பிற் களிறு மண்ணயர்பு**

**புள்ளி நிலனும் புரைப்பட லரிதென**

**(35–2:31.பரி)."சிறந்தன் உள்ளுத குரைப்போடு குரையோடு**

என்றும்,

**தீசெங் கனலியுங் கூற்றமு ஞமனும்"**

**மாசிலா யிரங்கதிர் ஞாயிறுந் தொகூஉம்**

**ஊழி யாழிக்க ணிருநில முருகெழு**

**(24–3:21.பரி)."கேழலாய் மருப்பி அழுதோ யெனவும்**

,என்றும்

**புருவத்துக் கருவல் கந்தத்தாற்**

**(24–4:22.பரி). நடுவண் றாங்கியிவ் வுலகந் தந்தடிப் படுத்ததை**

,என்றும்

**தானிலந் துளக்கற முழுமுத னாற்றிய"**

**பொலம்புனை யிதழணி மணிமடற் பேரணி**
**(36–13:34.பரி). இலங்கொளி மருப்பிற் களிறு மாகி**

.என்றும் அழைக்கப்படுகின்றது

**நரசிம்ம அவதாரம்**

காக்கும் பொருட்ட ,பிரகலாதனின் துன்பம் களைந்து செருக்கின் வடிவினான தூணிலிருந்து திருமால் ,இரணியனை வதம்புரிய நரசிங்கமாய் வெளிபட்டு அருள்புரிந்த நிகழ்வு ,இதனை .கடுவனிளவெயினனாரால் எடுத்தியம்பப்பட்டுள்ளது

**செயிர்தீர் செங்கட் செல்வ நிற் புகழப்**
**புகைந்த நெஞ்சிற் புலர்ந்த சாந்திற்**
**பிருங்க லாதன் பலபல பிணிபட**

**...................**

**வெடிபடா வொடிதூட் டடியொடு**
**(21–4:10.பரி). தடிதடி பலபட வகிர்வாய்த்த உகிரினை**

பிருங்கலாதன் என்ற சொல்வடிவம் ,பிரகலாதன் என்பதற்கு ,என .இங்கு இப்புலவரால் கையாளப் பட்டுள்ளது

**வாமன திரிவிக்ரம அவதாரங்கள்**

ன்இறைவனி ,மாவலியின் செருக்கினை அகற்றி குறளனாய் வந்து ,உயர்வினை உணர்த்த ,பேராற்றலை நெடியோனாய் மூவடியால் உலகளந்ததே வாமனர திரிவிக்ரம திருமால் பெயர்களில் ,தமிழ் இலக்கியங்களில் .அவதாரங்களாம் ஒன்றாக நெடியோன் என்பதும் பல இடங்களில் பயின்று வருதலைக் காணமுடியும்.

,தமது பாடலில் .கடுவளிளவெயினனார் ,பரிபாடலில் இரண்டு இடங்களில் திருமால் ,திருமாலின் புகழ்பேசி வருகையில் .உலகளந்த நிகழ்வினைக் குறிப்பிடுதலைக் காணமுடியும் ,இதனை

(3:20.பரி) ."**கீழே முலகமு முற்ற வடியினை**"

(3:54.பரி) ."**திணிநிலங் கடந்தக்காற் றிரிந்தயர்ந் தகன்றோடி**"

**அம்சாவதாரம்**

ஊழியிறுதியில் பெய்த பெருமழையால் உலகு மீண்டும் முழுகாதவாறு திருமால் அன்னமாய் உருவெடுத்து (அம்சாவதாரம்) அந்நீரைச் சிறகாலே வறளச் செய்து உலகைக் காத்த அருட் செயலை போற்றுதலை பரிபாடலில் கடுவனிளவெயினனார் கூறியுள்ளார் .இதனை இலக்கியங்களில் பரிபாடலை தவிர எந்த

சங்க இலக்கிய நூல்களிலும் காட்டப்படவில்லை ,

**மாவிசும் பொழுகுபுனல் வறள வன்னச்"**

**(3:25:26.பரி ) .சேவலாய்ச் சிறகர்ப் புலர்த்தியோ**

உலகில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது திருமால் அன்னச் சேவலாய் அவதாரம் எடுத்து உலகம் மூழ்காமல் இருக்க தன் சிறகாலேயே அந்நீரை வரளச் செய்தார் என்ற செய்தியை பரிபாடலில் மூலம் தெரிந்து கொண்டேன் .

**பலராமன்**

பிற சங்க இலக்கியங்களில் வாலியோன் (பலராமன்) குறித்தும், மாயோன் குறித்தும் அவர்கள் தெய்வ நிலையில் வைத்து வழிபட்டதனை குறித்தும், கூறப்பட்டுள்ளன. பரிபாடலிலும் பலராம அவதாரம் பேசப்படுகிறது. பரிபாடலில், இருவரையும் அடுத்தடுத்து வைத்தோ இணைத்தோ பேசப்படுதலைக் காணமுடிகிறது.

பரிபாடலில்

ஒள்ளொளியவை, ஒரு குழையவை, வளைநாஞ்சிலவை என்று(கலப்பை) பயின்று வருவன பலதேவனுக்குரியன. முதல் பரிபாடல், ஆதிசேடன் திருமுடிக்குமேல் இருக்க, திருமகள் மார்பினில் வீற்றிருக்க, அந்நிலையில் இருக்கும் திருமாலே, பலதேவனாகவும் திகழ்கின்றான் என்கிறது".(பரி.1:1–5)

இரண்டாம் பரிபாடலில் பிறப்பு முறையாலே வாலியோனுக்கு இளையனாதலின் இளையனாகவும், நினது சிறப்பு முறையைக் கருதி அவனுக்கு முதியவன் ஆகுவதும் உமக்கே உரிய சிறப்பு என்று பேசுகிறது ".(பரி.2:20–27)பதினைந்தாம் பரிபாடல், திருமாலிருஞ்சோலை மலையைப்பற்றிச் சிறப்பாகப்பேசுகிறது. அம்மலையில், பலராமருக்கும் திருமாலுக்கும் படிமம் இருந்ததனை கூறும் இளம்பெருவழுதியார், இருவரது இயல்புகளையும் இணைத்தே கூறுகிறார்". (பரி.15:51–62) மேலும், உருவில் இருவரும் வேறுவேறாய் இருப்பினும் காக்கும் தொழிலால் ஒருவரே என்று கூறுவதனை அறியமுடியும்.

**இதனை,**

**"வேறுவே றுருவின னொரு தொழில் லிருவர்த்**

**–15:13.பரி)." தாங்கு நீணிலை யோங்கிருங் குன்றம்**

**(14**

ஆக, பலராம அவதாரம், திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகவும், திருமாலும், பலராமனும், ஒருவரே என்பதும்

பரிபாடலில் பாடல்கள் வழி அறியலாம். பலராம், மாயோன் வழிபாடு, மற்றைய சங்க இலக்கியங்களின் வழிகாண்கின்ற பொழுது, இருவரையும் தெய்வநிலையில் வைத்துச் சிறப்புறப் போற்றப்பட்டதனைக் காணமுடியும். அம்மரபின் தொடர்ச்சியாய், பரிபாடலிலும் பலராம, மாயோன் சிறப்பு, பேசப்படினினும், ஒரு வளர்ச்சி நிலையினை, மாயோனை, திருமாலை முதலாக வைத்துப் போற்றப்படும் நிலையினை தெளிவுறக் காணமுடிகிறது.

பலராம வழிபாடு குறித்து ஆய்ந்து, கட்டுரை வரைந்துள்ள தொ. பரமசிவன் அவர்கள், மாமல்லபுரத்தில் கிருஷ்ணமண்டபத்தில், கண்ணன், பலராமன், நப்பின்னை ஆகிய மூவரும் இணைந்து நிற்கும் ஒரு சிற்பம் உள்ளதனையும், உடுப்பிக்கருகில் குடவூர்' என்ற கிராமத்தில் பலராமன் கோயில் உள்ளதனையும் சுட்டியுள்ளார்".(பண்பாட்டு அசைவுகள்,ப.136)

**கண்ணன்**

கண்ணன் அவதாரத்தில் வரும் கேசி என்ற அசுரனைக் கொன்ற செய்தியும், ஆய்ச்சியருடன் ஆடிய குரவைக்கூத்து, குடக்கூத்து என்ற நிகழ்ச்சிகளும் பரிபாடலில் இடம் பெற்றுள்ளன. இதனை,

**கூந்த லென்னும் பெயரொடு கூந்தல்"**

**(32–3:31.பரி )."....எரிசினங் கொன்றோய்**

இங்கு "கேசி குதிரையாய் வந்து பொருதானோரசுரன், இப்பெயர் கேசமென்னும் வடமொழி முதனிலையாக முடிந்தமையின் அதன் பொருண்மைப் பற்றிக் கூந்தல் என்றார்" .(சோமசுந்தரனார்,பொ.வே.பரி,ப.81)

கண்ணன் குரவைக்கூத்து ஆடியதும், குடக்கூத்து ஆடியதும் ஒரு சேர கடுவளிளவெயினனார் சுட்டியுள்ளார். இதனை,

"இடவல குடவல கோவல காவல" (பரி.3:83) இங்கு, இடவல (இடவ வலவ) என்பது ஆய்ச்சியரோடு குரவைக் கூத்தாடுங்கால் அவர்க்கு இடமும் வலமும் ஆகியவனே என்பதாம். குட என்பது கூத்தாடற்கொடுத்த குடத்தையுடையோய் என்பதாம். அல என்பது கலப்பைப் படையுடையவன் என்பதாம், கோவல (கோவலன்) என்பது இடையன் என்பதாம், காவல (காவலன்) என்பது காத்தற்றொழிலையுடையோனே என்பதாம் . (சோமசுந்தரனார்,பொ.வே.பரி,பக்.87–88) இங்கு சிலப்பதிகாரத்துள்

வரும் ஆய்ச்சியர் குரவையும், குடகூத்து ஆடிய நிகழ்வும் இதன் ஒப்பு வைத்து நோக்கத்தக்கது.

கண்ணன் குடமாடியதை தம் பாசுரங்களில் ,ஆழ்வார்களும் ,வராகம் ,கூர்மம் ,இவ்வாறாக பரிபாடலின்கண் .னர்சுட்டியுள்ள ,பலராமன் ,நரசிங்கம் ,வாமனம் திரிவிக்ரமம் ,மோகினி ,அம்சம் கண்ணன் ஆகிய அவதாரங்கள் இடம்பெற்றுள்ளன. கிடைத்துள்ள பரிபாடல்களின் அளவில், அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் இடம்பெற்ற பரசுராம, இராம அவதாரங்கள் இடம்பெறாமை சுட்டிக்காட்டத்தக்கது

**வேதமுதல்வன்**

வேதங்களைப் பற்றி பரிபாடல் பல இடங்களில் சுட்டுகின்றன. ஆகமங்களையும் விரிநூல் என்று உணர்த்துகின்றன. வேதங்களை ஓதும் பிரம்மனையும், பிரமனைப் படைத்தவன் திருமாலே என்பதையும் கூறுகின்றன. அவ்வேதங்கள் போற்றும் முதல்வன் திருமாலே என்பதையும் எடுத்தோதுகின்றன. சான்றாகச் சிலவற்றைக் காட்டலாம். இதனை,

**முன்னை மரபின் முதுமொழி முதல்வ"**
**நினக்குவிரிந் தகன்ற கேள்வி யனைத்தினும்**
**வலியினு மனத்தினு முணர்வினு மெல்லாம்**
(50–3:47.பரி)."**வனப்புவரம் பறியா மரபி னோயே**

இப்பகுதிக்கு "**அநாதியாய் வருகின்ற மரபினையுடைய வேதத்திற்கு முதல்வ, விரிந்து அகன்ற ஆகமங்களனைத்ததானும், அகங்காரத்தானும், மனத்தாலும் உணர்வினாலும் மற்றும் எல்லாவற்றாலும் நினக்கு வனப்பும் எல்லையும் அறிப்படாத மரபினோய்**".(பரி.17–18) என்று பரிமேலழகர் பொருள் உரைப்பார்.

. ,வேதமுதல்வன் என்றும் ,என்பதற்கு முதுமொழி முதல்வ விரிந்தகன்ற கேள்வி என்பதற்கு ஆகம என்று பொருள் உரைத்திருப்பது இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது. வேத முதல்வன் என்பதும், வேத ஆகமங்களாலே எல்லை காணமுடியாதவன் என்பதும் இப்பகுதி உணர்த்துகின்றது. இப்பாடலிலேயே கடுவனிளவெயினனார், திருமாலை "வேதத்து மறைநீ" .(பரி.3–66) என்று சுட்டுவதும், இங்கு வேதத்து மறை என்பதற்கு உபநிடதம் என்று பரிமேலழகர் பொருள் உரைப்பதும்.(பரி.பக்.19)திருமால் உபநிடதப் பொருளாகவும் உள்ளதனை உணர்த்துகின்றது.

**அருளாட்சி**

காயாம் பூவினது நிறத்தையுடைய திருமால் அருளே வெண்கொற்றக் குடையாக, அறமே கோலாகக் கொண்டு மூவேழ் உலகத்தையும், இரண்டாவதாக வேறோர் குடைநிழல் யாண்டும் படாதபடி, அவனது ஒரு குடை நிழலின்கீழ் காவலினை உடையவன் என்பதனை

**பறவாப் பூவைப் பூவி னோயே"**
**அருள்குடை யாக வறங்கோ லாக**
**இருநிழல் படாமை மூவே முலகமும்**
(76–3:74.பரி)." **ஒரு நிழலாக்கிய வேமத்தை மாதோ**

என்று கடுவனிளவெயினனார், திருமாலின் அனைத்துலக அருளாட்சியை எடுத்துரைக்கின்றார். இங்ஙனம், அனைத்துலகையும், வேறு ஒருவர் பங்கு இன்றி, அவன் ஒருவனே காக்கின்றான் என்பதை இப்பகுதி உணர்த்துகின்றது.

**திருமால் திருத்தலங்கள்**

பரிபாடல் பாடல்களுள், 15–ஆம் பாடல் திருமாலிருஞ்சோலை பற்றியதாக அமைந்துள்ளது. பரிபாடல் திரட்டில் உள்ள திருமால் பாடலில், இருந்தையூர் திருத்தலம் பற்றி கூறப்பட்டுள்ளது. இவ்விருத் திருத்தலங்கள் குறித்துக் காண்பதற்கு முன், கடுவனிள வெயினனாரால் கூறப்படும் கருத்துக்கள் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

ஆலமரமும், கடம்பமரமும், ஆற்றிடைக் குறையும், குன்றமும் பிறவுமாகிய அந்தந்த இடங்களில், பல்வேறு பெயர்களில் வழங்கப்படுபவனும், எவ்விடத்தும் இருப்பவனும் நீயே உன்னை தொழும் அடியார் கைகளில் அகப்பட்டவனும் நீயே, அவரவர் நினைத்தவற்றை முடித்துத் தருவதால் அவர்களுக்கு ஏவளானும் நீயே. அவர்கள் செய்கின்ற செயல்கள் அனைத்திற்கும் காப்பாக அமைந்தவனும் நீயே என்று அறியமுடியும். இதனை,
பலசினை

**ஆலமுங் கடம்ப நல்யாற்ற நடுவும்**
**கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்**
**அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்**
**எவ்வயி னோயு நீயேநின் னார்வலர்**
**தொழுதகை யமைதியி னமர்ந்தோயு நீயே**
**அவரவ ரேவ லாளனு நீயே**

**அவரவர் செய்பொருட் கரணமு நீயே".(பரி.4:66–70)**
**மேலும், அவரே அப்பாடலில்,**

**அழல்புரை குழைகொழு நிழறகும்"**
**(4:56.பரி). "மனக்கோள் தினக்கென வடிவுவே நிலையே"**

டியார்கள் மனத்திற் கொண்ட அ ,அஃதாவது .என்கிறார் உனக்கென நீ தனி வடிவமாக எதையும் ,வடிவமே வடிவமாதலன்றி ,இதனை .கொண்டதில்லை என்பதை அறியமுடியும்

**,முதல் திருவந்தாதி). "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே" (44**

பெரியாழ்வார் பாசுரப் பகுதியும் ,என்ற,

**ம் நீள்கடல் நெஞ்சினால் நினைப்பான்யவன் அவனாகு" (9–6–3,திருவாய்மொழி). "வண்ணனே**

என்ற நம்மாழ்வார் பாசுரப் பகுதியும் உடன் வைத்துச் சிந்திக்கத்தக்கது.

பரிபாடலில் திருமாலிருஞ்சோலையைப் பற்றி 15–ஆம் பாடலை இயற்றிய இளம்பெருவழுதியார் விரிவாகப்பேசுகிறார். இவர் இத்தலத்தினை 'மாலிருங்குன்றம், என்று குறிப்பிடுகின்றார் (பரி.15:17). சங்க இலக்கியத்தில் பெயர் சுட்டப்பெறும் திருமால் தலம் இதுவேயாம். அதிலும் பரிபாடலே முதலில் இத்தலத்தினைச் சுட்டுகிறது. சிலப்பதிகாரத்தில் இத்திருத்தலத்தினை 'திருமால் குன்றம்' என வழங்குவதோடு, அங்கிருந்த கோயிலையும் குறிப்பிடுகின்றது. இளம்பெருவழுதியார், இம்மலையில் வாலியோனுக்கும், மாயோனுக்கும் படிமம் இருந்ததனைக் குறிப்பிடுகிறார். மனங்குளிர பலவாறு போற்றிப் பரவுகின்றார், திருமாலிருங்குன்றச் சிறப்பினை எல்லாம் எடுத்துரைக்கின்றார்.

சக்கரவாள மலை முதலான சிறப்புடைய மலைகள் பல உள்ளன. அவற்றுள் பசிக்கொடுமையை அகற்றி எந்நாளும் நிறைந்த பயன்களைத் தந்து உதவும் குன்றங்கள் சிலவேயாம், அவற்றுள்ளும் தெய்வங்கள் விரும்பி உறையும் மலைகள் ஒருசிலவே உள்ளன; அவற்றுள்ளும் மாயோனையும் பலதேவனையும் தாங்கும் திருமாலிருங்குன்றம் சிறந்தது. இவ்விருவரும் உருவில் வேறுவேறு ஆயினும் காத்தல் தொழிலால் இருவரும் ஒருவரே. தூழாய் மாலை அணிந்த திருமால் அருள் புரிந்தாலன்றி வீடுபேறு துறக்கம் (வைகுந்தம்) ஏறுதல்

எளிதன்று. அரிதாகப் பெறத்தகுந்த துறக்கத்தை எளிதாப் பெறச் செய்யும் அத்திருமாலிருங்குன்றத்தை நாம் போற்றுவோம் என்கிறார் .(பரி.15:1–18) ,மேலும்

அம்மலையில் எழுந்தருளியுள்ள பலதேவனோடு அமர்ந்து நின்றருளும் திருக்கோலத்தை மாந்தர்களே எல்லீரும் நினைமின் ! அக்குன்றத்தின் சிறப்பைக் கேன்மின்! (பரி.15:19–20) என்றும்; அம்மலைக்கு சென்று திருமாலைத் தொழ இயலாதவர்கள் அம்லையையேனும் கண்டு தொழுமின் (பரி.15:30–34) என்றும்; (அதுவும் இயலாவிடின்) உன் மனைவியரோடும், பெற்றோரோடும்; குழவிகளோடும், அவருடைய சுற்றத்தாரோடும் கூடி அம்மலையை தெய்வமாக மதித்துச் திசை நோக்கித் தொழுது செல்லுங்கள் என்றும்,தைய லவரோடுத் தந்தா ரவராடும்"

**கைம்மக வோடுங் காத லவரொடும்**

**(48–15:46.பரி)."ணித் திசைதொழுதனிர் சென்மின்தெய்வம் பே**

ஆற்றுப்படுத்துகிறார். இத்திருத்தலத்தினை பூதத்தாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர் பாடியுள்ளனர். இதனை,

**என்னும் முக்கணம்மானும் !அருளைமீஎன்னம்மானே"**

**கோனும்தேவரும் தெருள்கொள் பிரமனம்மானும்தேவா**

**அம்மான்திருமலை,இருள்கள் கடியும் முனிவரும்ஏத்தும்**

**மருள்கள் கூடியும் மணிமலை திருமாலிருஞ்சோலை**

**(.7–7–10 , முதல் திருவந்தாதி)."மலையே**

என்ற நம்மாழ்வார் பாசுரம் சிந்திக்கத்தக்கது. திருமாலிருங்குன்றத்து திருமால் எத்தகையவன் என்பதனையும், இளம்பெருவழுதியார் போற்றுவதை அறியமுடியும். இதனை,

**எவ்வயின் உலகத்துந் தோன்றி அவ்வயின்"**

**மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்**

**(53–15:51.பரி )." அன்பது மேயிருங்குன்றத்தான்**

என, எல்லா உலகத்தினும் வெளிப்பட்டு, அவ்வவ்விடத்திலுள்ள உயிர்க்கூட்டங்களின் மயக்கத்தைச் செய்யும் பிறவித்துன்பத்தைக் களைவோன், அன்பு பொருந்தி இத்திருமாலிருங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கின்றான் என்பதுமாகும். இப்பகுதிக்கு "எல்லா உலகத்தினும் பல்வேறு சமயம் பற்றி வாழும் மக்கட் கூட்டத்தே அவ்வச் சமயத் தெய்வமாய் வெளிப்பட்டுப் பிறவித் துன்பம் போக்குவோனாகிய கண்ணன்

எனினுமாம்" .( சோமசுந்தரனார்,பொ.வே.பரி,ப.313) என்று சோமசுந்தரனார் விளக்கம் தருவதும் நோக்கத்தக்கது. திருமாலிருங்குன்றத்தில் எழுந்தருளி இருக்கும் பலராமன், மாயோன் ஆகிய இருவர் தம் வடிவழகை, திருப்படை கலன்களை எல்லாம் ஒரு சேர வைத்து புகழ்ந்துப் போற்றி வரும் இளம்பெருவழுதியார், இறுதியில், இருவரையும் தொழுது வழிபாடு செய்து, திருமாலிருங்குன்றத்து அடியின்கண் உறைந்து வாழும் பேறு எமக்கு எய்துமாறு அருள்புரிக என வேண்டிக் கொள்வோம் என்கிறார். இதனை,"

**இங்குன்றத் தடியுறை இயைகெனப்**
**பெரும்பெயர் இருவரைப் பரவுதும் தொழுதே**

(66–15:65.பரி).

இங்கு, குலசேகர ஆழ்வார், திருவேங்கடமலையில் வாழுதலே பெறும் பேறாக் கருதிபாடிய "ஊனேறு செல்வத்து".(பெருமாள் திருமொழி,4:1–10) என்னும் நான்காம் திருமொழிப்பகுதி, இங்கு உடன் வைத்து நோக்கத்தக்கது. இவ்வாறாக இளம்பெருவழுதியார், திருமாலிருங்குன்றத்தின் ஏற்றத்தையும் அங்கு உறையும் பலதேவன், மாயோன் ஆகியோரது சிறப்பையும் எடுத்துரைத்து, அத்திருத்தலத்திற்கு மக்களை ஆற்றுப்படுத்துகிறார்.

அம்மலையில் அடியுறையும் பேறு வேண்டும் என்ற தமது வேண்டுதலை முன்வைக்கின்றார். அதன் பின்னர் வந்த பக்தி இலக்கியங்களுக்கு இவைகள் எல்லாம் முன்னோடியாக அமைந்துள்ளன எனலாம். பத்துப்பாட்டில், முருகனுக்கு அமைந்த திருமுருகாற்றுப்படைப் போன்று, ஒரு பாடலேயாயினும் இப்பாடல் திருமாலுக்கான திருமால் உறையும் திருமாலிருங்குன்றத்துக்கான திருமலாற்றுப்படைப் பாடலாக அமைந்துள்ளதாக கருதலாம்.

பரிபாடல் திரட்டில், முதல் பாடலில் முதல் ஆறு அடிகளில் புலவர் மதுரை வையைக் கரையிலுள்ள இருந்தையூர் திருத்தலத்தில் அமர்ந்த திருமாலைத் தொழுது வாழ்த்துவதனை அறியமுடியும். இதனை,

**வானா ரெழிலி மழைவள தந்தத்**
**தேனார் சிமைய மலையின் னிழிதந்து**
**நான்மாடக் கூட லெதிர்கொள்ள வானா**
**மருந்தாகுத் தீநீர் மலிதுறை மேய**

**இருந்தையூ ரமர்ந்த செல்வநின்**

**(6–1:1.தி.ப.பரி) ."திருந்தடி தலையுறப் பரவுதுந் தொழுது**

எனச், சிலப்பதிகாரம், மதுரையின்கண் அமைந்துள்ள திருமால் திருத்தலங்களை பற்றிப் பேசுகின்றது. அவற்றுள் "நடுநீர் வையை நெடுமால் என்ற பகுதிக்கு அரும்பதவுரைக்காரர் இருந்தவளமுடையார் எனக் குறிப்புரை தருகிறார் ".(சிலம்பு.18:4,458)

பரிபாடல் குறிப்பிடும் 'இருந்தை யூரமர்ந்த செல்வன்" என்றது 'இருந்த வளமுடையார்' என்றதனோடு பெரிதும் ஒற்றுமையுடையது, அது கூடலழகர்ப் பெருமானையே குறிக்கும் என்பது மு.இராகவையங்காரின் கருத்தாம்".(கூடற்புராணம்,ப.ii) இவ்வாறு, பரிபாடல் திருமால்,திருத் தலங்களைச் சுட்டியதன் வழி, திருமாலின் ஐவகை நிலையில் ஒன்றாகிய அர்ச்சை நிலையையும் கூறப்பட்டதாகிறது.

**பிரமன் மற்றும் இருவர் தாதை**

திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றியவன் பிரமன் என்பதினாலே திருமால், பிரமனுக்குத் தந்தை ஆகின்றான் என்பது வழக்கு. கடுவனிளவெயினனார். வேதமாகிய ஓடையில் மலர்ந்த தாமரையில் பிறந்த பிரமனுக்குத் தந்தை என்பதனைக் கூறி அப்பிரமனும் நீயே என கூறுவதை அறியமுடியும். இதன்வழி திருமாலின் அந்தர்யாமித்துவமும் உணர்த்தப் பட்டது எனலாம். இதனை,

**வாய்மொழி யோடை மலர்ந்த**

**தாமரைப் பூவினுட் பிறந்தோனுந் தாதையும்**

**"நீயென மொழியுமா லந்தணர் அருமறை**

**(14–3:12.பரி).**

**அதுபோன்று**

**"இருவர் தாதை யிலங்கு பூண் மாஅல்" .(பரி.1:31)**

என்று. முதல் பரிபாடல் காமனுக்கும், சாமனுக்கும் தந்தை திருமால் என்பதனை கூறுகின்றது .(பரி.ப.47)

**ஆதிசேடன் சிறப்பு**

**பரிபாடல் முதற்பாடல் தொடக்கத்தில்**

**"ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலை**

**தீயுமிழ் திறனொடு முடிமிசை யணவர".(பரி.1:1–2)**

என்றும் பதின்மூன்றாம் பாடலில்

**"மின்னவிர் சுடர்மணி யாயிரம் விரித்த**
**கவைதா வருந்தலைக் .....".**(பரி.13:27–28)

என்றும், மூன்றாம்பாடலில் "ஆயிர வணர்தலை அரவு...."(பரி.3:59) என்றும், ஆதிசேடனது ஆயிரந்தலைகள் சுட்டிக்காட்டப்பட்டன. மேலும் அணையாக இருந்தமையும் கூறப்பட்டன.

பரிபாடல் திரட்டு முதல் பாடலில் ஆதிசேடன் பற்றிச் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இப்பாடலில் தொடக்கப் பகுதியும், இறுதிப்பகுதியும் இருந்தையூர் திருப்பதியையும், திருமாலையையும் பற்றிக் கூற, இடைப்பகுதி ஆதிசேடனை பல்வகை மக்கள் வழிபட்டது, அக்கோயிலில் எழும் ஒலிகள், நிகழ்வுகள், ஆதிசேடனை வழிபடுதலால் கிட்டும். பயன் ஆதிசேடனின் பெருமை என ஆதிசேடனை பற்றிப் பேசுகிறது "(பரி.ப.தி.1:30–82)ஆதிசேட பெருமை பேசும் பகுதியின சுருக்கம் அறியதக்கது. ஆதிசேடனார், திருமால் மந்தார மலையை எடுத்துத் திருப்பாற்கடலில் இட்டுக் கடைந்த பொழுது, அம்மலைமத்திற்கு வடமாக இருந்தவர்; வலிமைக்கு இருப்பிடமானவர்; உலகத்தை தன் தலையில் தாங்கினவர்; சிவபெருமான் திரிபுரமெரித்த பொழுது அவர் ஏந்திய மலைவில்லிற்கு நாணாக இருந்து அவருக்கு வெற்றி புகழ் தந்தவர் என்பதாக ஆதிசேடன் புகழ் கூறப்பட்டன".(பரி.ப.தி.1:67–78)

**"சென்றால் குடையாம் இருந்தல் சிங்காசனமாம்**
**நின்றால்மரவடியாம் நீள்கடலுள்என்றும்**
**புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம்புலகும்**
**. அணையாம் திருமாற்அரவு ".**(முதல் திருவந்தாதி,53)

என்ற பொய்கையாழ்வார் பாசுரம் இங்கு உடன் வைத்து சிந்திக்கத்தக்கது.

**கருடன்**

திருமாலின் ஊர்தியாக, கருடன் உள்ளான் என்பதும், அவனை பெரியத் திருவடி என்று போற்றுவதும் வைணவ மரபு. பரிபாடலில் திருமால் பாடல்களில், பல இடங்களில் திருமாலுக்குரிய கொடியாகக் கருடக்கொடி பேசப்படுவதனை காணலாம். அவற்றுள்,

**"சேவலங் கொடியோய்....".**(பரி.1:11)

என்றும்,

**"செவ்வா யுவணத் துஉ யர்கொடி யோயே"** .(பரி.2:60)
என்றும் ,

**"சேவலோங்கு உயர்கொடிச் செல்லு"**.(பரி.13:41)
என்றும்;

திருமாலுக்குரிய கொடியாக கூறப்பட்டுள்ளன. மேலும், திருமாலுக்குரிய பனை, கலப்பை, யானை,கருடன் முதலிய கொடிகளில் கருடக்கொடியே சிறப்பானது என்று கடுவனிளவெயினனார் கூறியுள்ளதை அறியமுடியும். இதனை,

**" சேவலோங் குயர்கொடி யோயே**
**சேவலோங் குயர்கொடி**
**நின்னொன் றுயர்கொடி பனை**
**நின்னொன் றுயர்கொடி நாஞ்சில்**
**நின்னொன் றுயர்கொடி யானை**
**நின், ஒன்றா வுயர்கொடி யொன்றின்று** ".(பரி.4:36.42)

என, அவரே, அக்கருடன் இடையில் கட்டப்பட்டதும் பாம்பு: அவனுடைய கொடி, முடி முதலியவற்றின் அணிகலனாக இருப்பதும் பாம்பு, அவனது தலையின் மேலும், சிறகின் மேலும் இருப்பது பாம்பு, அவனது இரையும் பாம்பே என்று சுவையுற கூறுவதனைக் காணலாம் .(பரி.4:42–48)

திருமாலுக்குக் கொடியாய், ஊர்தியாய் உடைய கருடனின் செருக்கை அடக்கிய நிகழ்வும் பரிபாடலின்கண் கூறப்பட்டுள்ளதை அறியமுடியும். இதனை,

**"ஆயிர வணர்தலை யரவுவாய்க் கொண்ட**
**சவ லூர்தியுஞ் செங்கண் மாஅல்**
**ஓவெனக் கிளக்குங் காலை முதல்வனை"**.(பரி.3:59–61)

எனத், திருபாற்கடல் கடைந்த நிகழ்வில், தேவாசுரப்போரில், திருமாலுக்கு ஊர்தியாகிய கருடன் தன்னாற்றலைப் பெரிதும் வியந்து, செருக்கு கொள்ள, திருமால் தன் சிறு விரலால் அழுத்த. அதனைத் தாங்கமாட்டாது செங்கண் மாலே ஓ! என அலறி, தனது தவற்றை உணர்ந்து வருந்தித் துதித்த கருடனுக்கு அருளிய திறம் இங்குக் கூறப்பட்டதாம். இதனை,

**வயங்குதுபூ ணமரரை வெளவிய வமிழ்திற ,ஏலர்"**
(16–3:15.பரி). **"ணைபயந்தோ னிடுக்கண் களைந்த புள்ளி**

என்ற இப்பாடலின்கண் அமரரிடமிருந்து அமிழ்தம் கொணர்ந்து தன் அன்னை வினரையின் அல்லல் அகற்றிய

நிகழ்வு கூறப்பட்டுள்ளது. இவ்வாறு திருமாலுக்கு கொடியாக, ஊர்தியாக கருடன் அமைந்துள்ளதும், அவன் குறித்த புராண நிகழ்வுகளும் பரிபாடலின் கண் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. திருமாலுக்குக் கொடியாக, ஊர்தியாக இருப்பதுவே கருடனின் பெருமையும் சிறப்புமாகும்.

**முடிவுரை**

இந்தியாவில் அதி முக்கியமான பெருந்தெய்வம் திருமால் திருமாலின் எண்ணற்ற அவதாரங்களில் பத்து அவதாரங்களான மச்ச கூர்ம,வராக ,நரசிம்ம ,வாமன ,பரசுராம ,இராம ,பலராம ,கிருஷ்ண,கல்கி என பத்து அவதாரங்கள் சிறப்பாக பேசப்படுகின்றன .பேசப்படும் பத்து அவதாரங்களில் கூர்மம் ,வராகம் ,நரசிம்மம் ,வாமன திரிவிக்ரமம் ,பலராமன் ,கண்ணன் என ஆறு அவதாரங்கள் பரிபாடலில் இடம் பெற்றுள்ளன .அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் இடம்பெறாத பரசுராம, இராம அவதாரங்கள் இடம்பெறாமை சுட்டிக்காட்டத்தக்கது .மேலும் சங்க இலக்கிய நூலான பரிபாடலில் புதிதாக இரண்டு அவதாரம் பேசப்பட்டுள்ளது அவை மோகினி அவதாரம் ,அன்னச் சேவல் அவதாரம் இவ்விரண்டு அவதாரங்களும் வேறு எந்த சங்க இலக்கிய நூல்களிலும் காணப்படவில்லை .திருமாலின் அவதார சிறப்புகளையும் அதன் பெருமைகளையும் பரிபாடலின் மூலம் அறிய முடிகிறது .

**துணை நூற்பட்டியல்**


1. சாமிநாதையர் .,உ.வே.,– பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், டாக்டர். உ. வே. சா. நூல் நிலையம், சென்னை ,ஏழாம் பதிப்பு ,2010.
2. சோமசுந்தரனார் ,பொ.வே.,– பரிபாடல் மூலமும் உரையும், கழக வெளியீடு ,திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ,திருநெல்வேலி– 6,சென்னை ,1964 .
3. பரமசிவன் ,தொ.,– பண்பாட்டு அசைவுகள், நாகர்கோவில், காலச்சுவடு பதிப்பகம் ,2020 .
4. கோவேந்தன் ,த.,–நாலாயிர திவ்ய பிரபந்தம், அமராவதி பதிப்பகம், சென்னை– 33.
5. சாமிநாதையர் , உ.வே.,– சிலப்பதிகாரம், டாக்டர் .உ.வே.சா. நூல் நிலையம், சென்னை ,2015.